செய்தி வெளியீடு எண்:498 நாள் :17.09.2013

## செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று (17.9.2013) தலைமைச் செயலகத்தில், திருச்சிராப்பள்ளி மாவட்டம், ஸ்ரீரங்கத்தில் புதிதாக ஏற்படுத்தப்பட்டுள்ள வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தை காணொலிக் காட்சி (Video Conferencing) மூலமாக துவக்கி வைத்தார்கள். மேலும் 7 கோடியே 58 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் வருவாய்த் துறைக்கென கட்டப்பட்டுள்ள புதிய கட்டடங்களையும் திறந்து வைத்தார்கள்.

கிராம நிருவாகம் மற்றும் நில நிருவாகம் தொடங்கி மாவட்ட நிருவாகம் வரை கள நிருவாகப் பணிகளையும் பல்வேறு சமூக நலத் திட்டங்களையும் செயல் படுத்தும் மிக முக்கிய துறையாக விளங்கும் வருவாய்த் துறையின் செயல் திறனை மேம்படுத்தும் வகையில் பல்வேறு ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தலைமையிலான அரசு எடுத்து வருகிறது.

நிருவாக வசதிக்காகவும் பொதுமக்களின் நலன் கருதியும் மாவட்டங்களில் உள்ள வருவாய்க் கோட்டங்களை மக்கள் தொகை, பரப்பளவு மற்றும் வருவாய்க் கிராமங்களின் எண்ணிக்கை ஆகியவற்றின் அடிப்படையில் பிரித்து புதிய கோட்டங்கள் ஏற்படுத்தப்படுகின்றன. அதன் அடிப்படையில், திருச்சிராப்பள்ளி வருவாய்க் கோட்டத்தினை பிரித்து திருச்சிராப்பள்ளி கிழக்கு, திருச்சிராப்பள்ளி மேற்கு, திருவெறும்பூர் ஆகிய மூன்று வட்டங்கள் அடங்கிய பகுதியை திருச்சிராப்பள்ளி வருவாய் கோட்டமாகவும், ஸ்ரீரங்கம், மணப்பாறை, மருங்காபுரி ஆகிய மூன்று வட்டங்கள் அடங்கிய பகுதியை ஸ்ரீரங்கம் வருவாய் கோட்டமாகவும் அறிவித்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 3.6.2013 அன்று ஆணையிட்டார்கள்.

அதன்படி, திருச்சிராப்பள்ளி மாவட்டம், ஸ்ரீரங்கத்தில் புதிதாக ஏற்படுத்தப்பட்டுள்ள வருவாய் கோட்ட அலுவலகத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று காணொலிக் காட்சி மூலமாக திறந்து வைத்தார்கள். இதன் மூலம், திருச்சிராப்பள்ளி மற்றும் ஸ்ரீரங்கம் வருவாய்க் கோட்டங்களில் மக்கள் நலத்திட்ட பணிகளை விரைந்து செயல்படுத்தவும், பொதுமக்களின் கோரிக்கைகள் மீது துரித நடவடிக்கை எடுக்கவும் பொது மக்கள் வருவாய் கோட்டங்களுக்கு சென்று வரும் காலதாமதத்தை தவிர்க்கவும் வழிவகை ஏற்படும்.

வருவாய்த் துறை அலுவலர்கள் சிறப்பாக பணிபுரிவதற்கும், வருவாய்த் துறை அலுவலகங்களை நாடி வரும் பொதுமக்களுக்குத் தேவையான வசதிகளை வழங்கிடவும், வருவாய்த் துறையின் பல்வேறு அலுவலகங்களுக்கு அனைத்து வசதிகளுடன் கூடிய சொந்தக் கட்டடங்கள் கட்டுவதற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தலைமையிலான அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

அதன்படி, சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூர் வட்டாட்சியர் அலுவலகத்திற்கென 1 கோடியே 68 லட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள கட்டடம்;

திருநெல்வேலி மாவட்டம், தென்காசி வட்டாட்சியர் அலுவலகத்திற்கென 1 கோடியே 97 லட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள கட்டடம்;

தருமபுரி மாவட்டம், அரூர் வருவாய் கோட்ட அலுவலர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டம், புதுக்கோட்டை வருவாய் கோட்ட அலுவலர்களுக்காக 76 லட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள குடியிருப்புகள்;

பெரம்பலூர் மாவட்டத்தில் இரண்டு துணை ஆட்சியர்களுக்காக 75 லட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள குடியிருப்புகள், செட்டிகுளம் மற்றும் பசம்பலூர் ஆகிய இரண்டு குறுவட்ட வருவாய் ஆய்வாளர்களுக்காக 20 லட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள குடியிருப்புடன் கூடிய அலுவலகக் கட்டடங்கள்;

புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் 1 கோடியே 50 லட்சம் ரூபாய் செலவிலான கூடுதல் கட்டடம், ஆலங்குடி, ஆவுடையார்கோவில் மற்றும் குளத்தூர் ஆகிய மூன்று வட்டாட்சியர் அலுவலகங்களுக்கு 19 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள வாகன நிறுத்துமிடங்கள்;

திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் 52 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள பதிவறை;

என மொத்தம், 7 கோடியே 58 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள கட்டடங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று திறந்து வைத்தார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் திரு தோப்பு என்.டி. வெங்கடாசலம், தலைமைச் செயலாளர் திருமதி ஷீலா பாலகிருஷ்ணன், இ.ஆ.ப., வருவாய்த் துறைச் செயலாளர் திரு ககன்தீப் சிங் பேடி, இ.ஆ.ப., வருவாய் நிர்வாக ஆணையர் / கூடுதல் தலைமைச் செயலாளர் திரு டி.எஸ். ஸ்ரீதர், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * * * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9
நாள்: 17.9.2013